# இன்று முதல் உங்கள் கரங்களில்



சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

மதுரா ஜுவலரி
MADURA JEWELLERY
No.17/A, Munai Street, Batticaloa
17/A, முனை வீதி, மட்டக்களப்பு
Tel: 065- 2222196

மலர்: 01 | இதழ்: 01 | மட்டக்களப்பு சார்வரி வருடம் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமை 18.02.2021 | supeedsam.com | supeedsam@gmail.com

## மட்டக்களப்பு மாவட்டமே முன்னிலை வகிக்கின்றது

(வேதாந்தி)

### மட்டக்களப்பில் அதிகரிக்கும் தற்கொலை காரணம் என்ன?

2020 இல் 167 பேர்

### உல்லாச புரியாகும் உன்னிச்சை

### கிழக்கில் கொவிட் தடுப்பூசிகளைப் பெறுவதற்கு பொதுமக்கள் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகோள்

### ஆட்சியாளர்களின் அவமானமாக திருக்கோணேஸ்வரம்

### பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை வெற்றியும் தோல்வியும்

### ரஞ்சன் ராமநாயக்கா பதவி இழப்பாரா?

### உல்லாச புரியாகும் உன்னிச்சை

### "பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை"

ஒரு அனுபவப்பகிர்வு (01)

### திருக்கோணமலையில் தமிழரசுக் கட்சி

2009 இலிருந்து 2021 வரை – 01

### ஆண்களைப் பாதிக்கும் ஹோர்மோன்

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 18.02.2021 supeedsam.com supeedsam@gmail.com







# உகந்தைமலை முருகனாலயத்தின் உரிமை கோரி தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி!



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற உகந்த மலை முருகனாலயத்தின் உரிமை கோரி தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய் யப்பட்டுள்ளது. அதன்படி அவ்வாலயம் தொடர்ந்து இந்துஆகம முறைப்படி தற்போதைய

02 ஆம் பக்கத்தில்...

## கொரோனா அச்சம் கிழக்கு மாகாணத்தில் மூடப்பட்ட அரச திணைக்களம்!

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள நிர்வாக பிரிவில் பத்து பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை காரணமாக

02 ஆம் பக்கத்தில்...



பாராளுமன்ற சபாநாயகர் உட்பட 24ற்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொவிட் தடுப்பூசியை ஏற்றியுள்ளனர்.

## அரச சேவைகளை சரியாக செய்யாத உத்தியோகத்தர்களை வெளியேறுமாறு வேண்டுகோள்

### இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசசேவைகளை சரியாக செய்யாத அரச உத்தியோகத்தர்கள் இருந்தால் தயவுசெய்து மாவட்டத்தைவிட்டுவெளியேறிச்செல்லுமாறு இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

மட்டக்களப்பு புதூர் பகுதியில் கொங்கிறீட் வீதியமைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

02 ஆம் பக்கத்தில்...

## ஊறணி சந்தி விபத்தில் கல்முனையைச் சேர்ந்தவர் உயிரிழப்பு



(எம் எம் ஜெஸ்மின்)

மட்டக்களப்பு கொழும்பு வீதியின் ஊறணி சந்தியில் பக்கோ இயந்திரமும், மோட்டார்சைக்கிளும் மோதி

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்கள், உத்தியோகத்தர்கள் எந்தவிதத்திலும் திறமை குறைந்தவர்கள் அல்ல

### மட்டு அரச அதிபர்



(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டம் ஏனைய மாவட்டங்களை விட சமுர்த்தி கணிணிமயப்படுத்தல் நிலையத்தின் மூலம் தரமாக முன்னேறி வருகின்றது என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி தன்னியக்க வங்கி மற்றும் வங்கி சங்க கட்டட திறப்பு விழா சமுர்த்தி வங்கியில் இடம்பெற்ற போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்

02 ஆம் பக்கத்தில்...

## ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதார உதவியாளர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில்

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

சீருடைக்கான கொடுப்பனவை அதிகரித்தல் மற்றும் மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கள்

02 ஆம் பக்கத்தில்...




## காத்தான்குடியில் 6000 கிலோவுக்கு மேல் பதுக்கி வைத்து விற்பனை செய்த கழிவு தேயிலை

### விசேட அதிரடிப் படையினரால் கண்டு பிடிப்பு; சுற்றிவளைப்பில் பெருமளவு தேயிலை மீட்பு; களஞ்சியசாலைக்கும் சீல்



(ஜவ்பர்கான் ,கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு காத்தான்குடியில் தேயிலை தூள் விற்பனை செய்யும் வியாபார நிலையமொன்றை நேற்றிரவு (17.02.2021) புதன்கிழமை முற்றுகையிட்ட விஷேட அதிரடிப்படையினரும் காத்தான்குடி

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு இ.போ.ச சாரதிக்கு கொரோனா

### ஊழியர்கள் அனைவருக்கும் அன்டிஜன் பரிசோதனை

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு டிப்போவில் பணிபுரியும் சாரதியொருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து டிப்போவில் கடமை புரியும் %5 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த டிப்போ சாரதி சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே

02 ஆம் பக்கத்தில்...






## மன்னாரில் 50 ஆயிரம் பேருக்கு கொவிட் தடுப்பூசி வழங்க நடவடிக்கை

### பணிப்பாளர் த.வினோதன்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி குறிப்பிட்ட வயதுடையோர் அனைவருக்கும் சுமார் ஐம்பதாயிரம் பேருக்கு கொரோனா தடுப்பூசி

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் வருடாந்த இடமாற்றம் மார்ச் 01 முதல் அமுல்

( முகமட் இர்ஷாக்)

தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட கிழக்கு மாகாண இணைந்த சேவைகள் இடமாற்றம் மார்ச் 01 ஆந் திகதி தொடக்கம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பு கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.







# சிறுவர் தொடர்பிலான குற்றவியல் குற்றங்கள் தனிப்பட்ட குற்றங்களாகக் கருதப்படாமல் முழு சமுகத்திற்கும் எதிரான குற்றங்களாகவே நோக்கப்படுகின்றது

( பாறுக் ஷிஹான்)

சட்டம் ஒரு சமுகத்தின் அமைதியையும், நீதியையும் நிலைநாட்ட அடிப்படையாக அமைகின்றது. குறிப்பாக வேறு வேறு சட்டங்கள் தனித்தனி நோக்கங்களைக் குறிக்கோளாக கொண்டிருக்கிறது. சிறுவர் தொடர்பிலான குற்றவியல் குற்றங்கள்

ஒரு தனி நபருக்கெதிரான தனிப்பட்ட குற்றங்களாகக் கருதப்படாமல் முழு சமுகத்திற்கும் எதிரான குற்றங்களாகவே அனைவராலும் நோக்கப்படுகிறது. இவ்வாறு தெரிவித்தார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் .

தொற்றுக் காலத்தின் போது சிறுவர்களுக்கு எற்பட்டுள்ள இம்சைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் போது சிறுவர் தொடர்பான அதிகாரிகள், சுகாதார துறையினர், பொலிஸ் மற்றும் நன்னடத்தை அதிகாரிகள் முன்னிலையில் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் .தொடர்ந்து உரையாற்றுகையில்

உலகில் வாழும் மக்களை இன்று மரண அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கி வருகின்ற ஒன்றாக கொரோனா தொற்று காணப்படுகிறது. இக்கட்டான சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு நாட்டின் பல பகுதிகள் முடக்கிவிடப்பட்டன. இக்காலத்தில் பாடசாலை மாணவர்கள் இணைய வழி கற்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.



இதன் காரணமாக கையடக்கத் தொலைபேசி பாவனை மாணவர்களுக்கு பெற்றோர்களின் முழு அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டு வருகிறது. இளம் சமுதாயத்தின் கல்வித் தேடல்களில் இணையவழி வன்முறைகள் தொற்றுக் காலத்தில் மேலோங்குகிறது

பெரும்பாலான சிறுவர் துஷ்பிரயோகங்கள் பொலிஸ் நிலையங்களிலும், ஏனைய சமூக மட்டத்திலும் விசாரணை செய்யப்பட்டாலும், அவைகள் நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்படாமல் சமாதானப்படுத்தப்பட்டு வருகின்றமை கவலைக்குரியது. இதனால் தப்புச் செய்கின்றவர்கள் இலகுவில் தப்பித்துக் கொள்கின்றனர். இதற்கு சாட்சிகள் முன்வராமை, சமுகத்தின் ஏளனமான பார்வை, ஆதாரங்கள் அழிக்கப்படல் என்பவைகள் வழக்கொன்றை தொடர்வதற்கு பலமற்ற விடயங்களாக இருக்கின்றது. அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீள்பாதிப்புக்குள்ளாகியும், இரட்டிப்பு பாதிப்புக்குள்ளாகியும். பல்முனைப் பாதிப்புக்குள்ளாகியும் வருகின்றனர். பிள்ளைகளின் அறிவுக்கும் வளர்சிக்கும் ஏற்றாற்போல் சவாலுக்குரிய நடத்தையுடைய பிள்ளைகள் எமது பிரதேசத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சமுகத்தில் உள்ளவர்களின் வறுமை, கல்வியறிவின்மை போன்ற காரணங்களினால் பெற்றோர்கள் அறியாத வகையில், சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இவ்வாறான செயல்கள் மூலமாக சிறுவர் உரிமை எத்தகைய விதத்தில் பாதிப்படைகிறது என்பதை எவரும் ஆழமாக நோக்குவதில்லை.

கல்வி கற்கின்ற பிள்ளைகளுக்கு பாதுகாப்பிற்கான உரிமை உண்டு. உடல் ரீதியான அல்லது உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் தீங்குகளிலிருந்தும் பிள்ளையை பாதுகாப்பதற்கு பொருத்தமான சட்டவாக்க, நிருவாக, சமூக மற்றும் கல்வி நடவடிக்கைகளை அரச தரப்பினர் எடுக்க வேண்டுமென சிறுவர் சமயாத்தின் ஒன்பதாவது உறுப்புரை கூறுகிறது. இதனடிப்படையில் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அற்பணிப்புடன் செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது என்றார்.

## மட்டக்களப்பு இ.போ.ச சாரதிக்கு கொரோனா...

டிப்போவிலுள்ள சாரதிகள் மற்றும் ஊழியர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுத.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பணிமனையினால் சுகாதார வைத்தியதிகாரி எஸ்.கிரிசுதன் தலைமையிலான சுகாதார அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின்போது வேறு எவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்படவில்லையென சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஊறணி சந்தி விபத்தில் கல்முனையைச் சேர்ந்தவர்...

நேற்று இடம்பெற்ற விபத்தில் கல்முனையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், அவரது மனைவி படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கல்முனைக்குடி 9ம் பிரிவு பள்ளி ஒழுங்கை வீதியைச் சேர்ந்த 63 வயதுடைய இராசதம்பி முகமட் றபீக் என தெரியவருவதுடன், படுகாயமடைந்த மனைவி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் ஏறாவூரில் இருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார்சைக்கிளில் பயணித்த போது ஊறணியிலிருந்து திருப்பெருந்துறையை நோக்கிப் பயணித்த பக்கோ இயந்திரமும், ஊறணி சந்தியை குறுக்கறுக்கும் போது மோட்டார்சைக்கிளும் பக்கோ இயந்திரமும் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பில் பக்கோ இயந்திரத்தை செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காத்தான்குடியில் 6000 கிலோவுக்கு மேல் பதுக்கி வைத்து...

சுகாதார அதிகாரிகளும் அங்கிருந்து 6000 கிலோவுக்கு மேல் பதுக்கி வைத்து விற்பனை செய்ததாக கூறப்படும் கழிவு தேயிலையை கண்டு பிடித்து கைப்பற்றியுள்ளனர்.

காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள தேயிலைதூள் விற்பனை செய்யும் இந்த வர்த்தக நிலையத்தில் கழிவு தேயிலை மற்றும் மனித பாவணைக்குதவாத தேயிலை தூள் விற்பனை செய்வதாக விஷேட அதிரடிப்படைக்கு கிடைத்த தகவலையடுத்து விஷேட அதிரடிப்படையினரும் காத்தான்குடி சுகாதார அதிகாரிகளும் குறித்த தேயிலை தூள் விற்பணை நிலையத்தை நேற்றிரவு சுற்றிவளைத்து அங்கு சோதனை நடவடிக்கைகளை மேற் கொண்டனர். களுவாஞ்சிகுடி விஷேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரேமரட்ண, கல்முனை விஷேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரத்ணாயக்கா, காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம்.நபீல், காத்தான்குடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.பசீர், பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.ரஹ்மத்துல்லா உட்பட விஷேட அதிரடிப்படையினரும் இணைந்து இந்த முற்றுகை நடவடிக்கையை மேற் கொண்டதுடன் பரிசோதனையிலும் ஈடுபட்டனர்.

இதன் போது 5000 கிலோவுக்கு மேல் காணப்பட்ட கழிவு தேயிலை பக்கட்டுக்களுக்கு சீல் வைத்ததுடன் குறித்த வியாபார நிலைய உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையினையும் மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தேயிலை அபிவிருத்தி சபைக்கு அறிவித்துள்ளனர்.

குறித்த தேயிலை தூளை களஞ்சியப்படுத்தியிருந்த களஞ்சிய நிலையத்துக்கு சுகாதார அதிகாரிகள் சீல் வைத்து மூடியுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்கள், உத்தியோகத்தர்கள்...

மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

மட்டக்களப்பு மாவட்டம் ஏனைய மாவட்டங்களை விட சமுர்த்தி கணிணி மயப்படுத்தல் நிலையத்தின் மூலம் தரமாக முன்னேறி வருகின்றது. இலங்கையிலே கிட்டத்தட்ட 135 கணிணி மயப்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கிகள் உள்ளன. அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்தாவது கணிணி மயப்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கியை திறந்து வைத்துள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டம் வறுமையின் கீழ் உள்ளதாக சுட்டிக் காட்டப்படுகின்றது. இதில் உண்மைத் தன்மை இருக்கலாம். இருந்தாலும் சுட்டிக்காட்டும் அளவிற்கு எமது மக்களின் வாழ்க்கைத் தரம் இல்லை என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

வறுமையிலுள்ள மக்களுக்கு சேவை செய்யும் சமுர்த்தி வங்கிகளை ஒரு இறுக்கமான, நேரிய கட்டமைப்புடன் சேவை வழங்க வேண்டும் என்ற நோக்கில் சமுர்த்தி பணிப்பாளருடன் கலந்தாலோசித்த பொழுது உத்தியோகத்தர்களின் பங்களிப்பு குறைவாக காணப்படுவதாக கூறினார்.

ஆனால் எனக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. எமது மாவட்ட இளைஞர்கள், உத்தியோகத்தர்கள் எந்தவிதத்திலும் திறமை குறைந்தவர்கள் அல்ல. அவர்களின் தெளிவான பார்வை, அவர்களது திறமையை வெளிக்காட்டக் கூடிய வகையில் சந்தர்ப்பம் வழங்கினால் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையில் சமுர்த்தி வங்கிகளை தன்னியக்க வங்கி மூலமாக மாற்ற வேண்டும், அதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று உத்தியோகத்தர்களிடம் கேட்டுக் கொண்டேன்.

தற்போது பார்க்கும் போது மட்டக்களப்பு மாவட்டம் ஏனைய மாவட்டங்களை விட சமுர்த்தி கணிணி மயப்படுத்தல் நிலையத்தின் மூலம் தரமாக முன்னேறி வருகின்றது. இலங்கையிலே கிட்டத்தட்ட 135 கணிணி மயப்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கிகள் உள்ளன. அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்தாவது கணிணி மயப்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கியை திறந்து வைத்துள்ளோம்.

இதனை ஒப்பிடும் போது குறித்த துறையில் நாம் விரைவாக முன்னேறி வருகின்றோம். இந்த இடத்தில் மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களை பாராட்டுகின்றேன் என்றார்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் திருமதி அ.பாக்கியராஜா, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா, மாவட்ட சமுர்;த்தி கணக்காளர் எம்.எஸ்.எம்.பஸீர், மாவட்ட சமுர்த்தி சிரேஷ்ட முகாமையாளர் ஜே.எப்.மனோகிதராஜ், செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.வீ.ரமீஸா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் சமுர்த்தி சங்க தலைவர்கள் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதுடன், அதிதிகளுக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

## உகந்தைமலை முருகனாலயத்தின் உரிமை கோரி தொடரப்பட்ட வழக்கு...

வண்ணக்கர் பரிபாலனசபையுடன் இயங்கும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருவருட காலமாக பொத்துவில் மாவட்ட நீதிமன்றில் குறித்த வழக்கு நடைபெற்றுவந்தது. இறுதியாக கடந்த வாரம் நீதிமன்றில் இவ்வழக்கு எடுக்கப்பட்டவேளை மாவட்ட நீதிபதி எம்.எச்.மொகமட் ராபி வழக்காளி எதிராளி ஆகியோரின் சட்டத்தரணிகளின் வாதங்களை அவதானித்து இவ்வழக்கை தள்ளுபடி செய்வதாக கட்டளையிட்டார்.

வழக்கைத்தொடுத்தவர் மொனராகலையைச்சேர்ந்த கோனார முதியான்சலாகே ஜெயதிக என்பவராவார். எதிராளியாக தற்போது ஆலயத்தை பரிபாலித்துவரும் பொத்துவிலைச்சேர்ந்த சிறிவர்த்தன திசாநாயக்க முதியான்சலாகே சுதுநிலமே என்பவராவார்.

எதிராளி சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணி எம்.கே.பேரின்பராசா சட்டத்தரணி என்.சிவரஞ்சித் ஆகியோர் ஆஜராகி உரியஆவணங்களோடு வாதிட்டனர்.

கடந்தவருடம் 2020.02.12ஆம் திகதி தொடரப்பட்ட இவ்வழக்கின்படி இவ்வாலயத்திற்கு தானே உண்மையான உரித்தாளி உடமையாளி எனவும் எதிராளியையும் அவரது சேவையாட்களையும் வெளியேற்றி அவர்கள் ஆலயத்துள் எந்தச்செயல்களிலும் ஈடுபடத்தடையாணை பிறப்பிக்குமாறும் ஆலயத்திற்குவரும் காணிக்கை ஏனைய அன்பளிப்புகளை முறையற்ற விதத்தில் கையாண்டுநியாயமற்ற செறிவூட்டல் நிகழ்ந்துள்ளதாகவும் நஷ்டஈடாக %5லட்சருபாவையும் தீர்ப்பு வழங்கப்படும்வரை மாதாந்தம் 2லட்சருபாவை செலுத்தவேண்;டும் என எதிராளிக்கு கட்டளையிடவேண்டும் எனவும் வழக்காளி கோனார முதியான்சலாகே ஜெயதிக வழக்குத் தொடர்ந்தார். 1903இல் எழுதப்பட்டதாகக்கூறும் உறுதியையும் சமர்ப்பித்திருந்தார்.

எதிராளியான தற்போது ஆலயத்தை பரிபாலித்துவரும் வண்ணக்கரான பொத்துவிலைச்சேர்ந்த சிறிவர்த்தன திசாடயக்க முதியான்சலாகே சுதுநிலமே தரப்பில் முன்வைக்கப்பட்ட தரவுகளின்படி

இவ்வாலயம் இந்து கலாசார திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட பொதுக்கோயில் எனவும் அவர் மரபுரீதியாக பரம்பரையாக பரி;துரைக்கப்பட்டு ஆலயபரிபானசபையினரால் அங்கீகரிக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்டவரெனவும் நம்பிக்கைப்பொறுப்புச்சட்டத்தின் கீழ் எதிராளிக்கு சட்டரீதியான ஆவணம் எதுவுமில்லை ஆதலால் முகத்தோற்றஅளவிலேயே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும் இவ்வாலயம் ஆகமமுறைப்படி அமையப்பெற்றதனால் இந்து ஆகம விதிமுறைப்படி பூஜை மற்றும் திருவிழாக்கள் நடைபெற்றுவருவதும் தற்போதுள்ள வண்ணக்கர் பரம்பரை பரம்பரையாக வந்தவரெனவும் அவர் 2015.05.22ஆம் திகதி பாரமெடுத்தவர் என்றும் ஆவணரீதியாக சமர்ப்பிக்கப்பட்டது.

இரு திறத்தவர்களது சமர்ப்பணங்களை ஏற்று பரிசீலித்த நீதிபதி ராபி :இது மதவழிபாட்டுத்தளம்.அது தொடர்பில் தொடரப்படும் வழக்கு நம்பிக்கைபொறுப்புச்சட்டத்தின் 102ஆம் பிரிவின் படி பிரதேசசெயலாளரின் சான்றிதழ் இணைக்கப்படவேண்டும். ஆனால் வழக்காளியின் ஆவணத்திலே இது இல்லாதகாரணத்தினால் இவ்வழக்கிடினை கொண்டு நடாத்த வழக்காளிக்கு சட்டரீதியான தகைமையில்லை என தீர்மானித்து வழக்குச்செலவுகள் ஏதுமின்றி வழக்கைத் தள்ளுபடிசெய்து கட்டளையாக்கினார்.

ஒரு வருடமாக இடம்பெற்றுவந்த இவ்வழக்கு நியாயமாகதீர்க்கபபட்டதையடுத்து தற்போதைய வண்ணக்கர் சுதா நேற்றுமுன்தினம் விசேட பூஜையொன்றை ஆலயத்தில் நடாத்தினார். அவ்வமயம் அவர்சார்பிலான சட்டத்தரணிகளும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா அச்சம் கிழக்கு மாகாணத்தில் மூடப்பட்ட...

கிழக்கு மாகாண கல்வி திணைக்கள நிர்வாக பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.டி.ஏ.நிசாம் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி கிழக்கு மாகாண கல்வி திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியதை அடுத்து நடத்தப்பட்ட அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளின் போது பத்து பேருக்கு கொவிட்19 உறுதிசெய்யப்பட்டது.

அதனையடுத்து தொற்று உறுதியானோர் தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஏனைய உத்தியோகத்தர்கள் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாகாண கல்வி பணிப்பாளர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவருக்கு கொரோனா தொற்று இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.டி.ஏ.நிசாம் தெரிவித்தார்.

## மன்னாரில் 50 ஆயிரம் பேருக்கு கொவிட்....

வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது சம்பந்தமாக தற்பொழுது இவர்களுக்கான விழிப்புணர்ச்சி கூட்டங்கள் இடம்பெற்று வருவதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரைக்கும் கொரோனா தொற்றாளர்கள் தொகை 232 நபர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் இதில் இவ் நடப்பு வருடமான 2021ம் ஆண்டு மட்டும் 215 நபர்கள் இவ் தொற்று நோய்க்கு உள்ளாகி இருந்தனர்.

இதில் 46 நபர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையிலும் 169 நபர்கள் சமூக மட்டத்தில் சுகாதார சேவைகள் பணி மனையினால் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டதாகும்

இது வரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 9891 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெப்ரவரி மாதத்தில் மட்டும் 1263 பி.சி.ஆர் பரிசோதனை இடம்பெற்றுள்ளன.

சமூகத்தில் மேற்கொள்ள்பட்ட ஒவ்வொரு நூறு பி.சி.ஆர் பரிசோதனைகளில் 4.7 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னார் சுகாதார திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற 1280 தடுப்பூசிகளில் 1250 தடுப்பூசிகள் இது வரைக்கும் வழங்கப்பட்டுள்ளன. இவைகள் சுகாதார திணைக்களத்தைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் சுகாதாரப் பகுதினருடன் இணைந்து செயல்படும் பொலிசாருக்கும் இவ் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் மாதம் இறுதிப் பகுதியில் அல்லது மார்ச் மாதம் ஆரம்பத்தில் 30 வயது தொடக்கம் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு அதாவது அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில் புரிவோர் ஒவ்வொருவருக்கும் இவ் தடுப்பு ஊசிகள் வழங்கப்பட இருக்கின்றன.

தற்பொழுது இவ் தடுப்பூசி வழங்கல் தொடர்பாக பொது மக்களுக்கும் அரச, அரசு சார்பற்ற நிறுவன பணியாளர்களுக்கு விழிப்பூட்டும் செயல் திட்டம் தற்பொழுது மன்னாரில் இடம்பெற்று வருகின்றன.

இதுவரைக்கும் இவ் விழிப்பூட்டும் நிகழ்வுகள் முசலி பிரதேச பிரிவிலும் மன்னார் மாவட்ட செயலகத்திலும் இன்று (நேற்று 17.02.2021) நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் நேற்று (17) சன்னார் பகுதியில் தாய்மாருக்கான இது விடயமான விழப்புனர்வு நிகழ்வு நடைபெற்று வருகின்றன. இவ் தடுப்பு ஊசி சம்பந்தமாக மக்களுக்கு பரவலாக விளக்கம் கொடுக்கப்பட்டு வருகின்றன. அகவே பொது மக்கள் எவ்வித பயமுமின்றி இவ் தடுப்பு ஊசியை போட்டுக் கொள்வது நலமாக இருக்கும். மன்னார் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கும் சுமார் ஐம்பதாயிரம் நபர்களுக்கு இவ் தடுப்பு ஊசி வழங்கப்பட இருக்கின்றன என மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் இவ்வாறு தெரிவித்தார்.

## அரச சேவைகளை சரியாக செய்யாத...

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களுக்குரிய சேவைகளை செய்யாமல் ஒருசில அரச உத்தியோகத்தர்கள் முகப்புத்தகத்திலும் ,வேறு சமுகவலைத்தளங்களிலும் பொழுதைக்கழிக்கின்றார்கள்.மாவட்டத்திற்கு வருகின்ற அரசநிதிகளை

சரியாக பயன்படுத்தாமல் அவ்நிதிகளை திருப்பிஅனுப்புகின்ற அரசஅதிகாரிகளும் நமது மாவட்டத்தில் உள்ளனர்.கையெடுத்து கும்புடுகின்றேன் யுத்தத்தால் நலிவடைந்த நமது மக்களுக்கு சரியாக சேவை செய்ய முடியாதவர்கள் மாவட்டத்தைவிட்டு வெளியேறுங்கள் 33400மக்கள் வாக்களித்தபடியால்தான் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அமைச்சுப்பதவியொன்று கிடைத்துள்ளது. எமக்குள்ள அரசியல் அதிகாரத்தை வைத்து நாம் மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை செய்து வருகின்றோம் என்றார்.

## ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில்...

ஆகியன உள்ளிட்ட பத்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதார உதவியாளர்களும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை முன்றலில் இக்கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டக்காரர்கள் தமது கோரிக்கைளை வலியுறுத்தும் பதாதைகளை ஏந்திநின்றனர். சீருடைக்கென தற்போது வழங்கப்படுகின்ற 9 ஆயிரத்து 600 ரூபா 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும், மேலதிக நேர வேலைக்காக கொடுப்பனவு வழங்கப்படவேண்டும், 180 நாட்கள் பணியாற்றியுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும், இடர்கால கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும்

வாரத்தில் ஏழு நாட்கள் பணியாற்றுகின்றபோதிலும் ஐந்து நாட்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு வழங்கும் நிலை தவிர்க்கப்படவேண்டும் இதுபோன்ற பத்து கோரிக்கைகள் சுகாதாரத் துறை ஊழியர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

# கல்முனை நகர லயன்ஸ் கழகம் பழமை வாய்ந்த, சேவைத்திறன் மிக்க கழகம்!; லயன்ஸ் மாவட்ட ஆளுநர் பாராட்டு






(ஏ.எல்.எம்.சலீம்)

மிக நீண்ட காலமாக மக்கள் சேவையாற்றும் பழமை வாய்ந்த சிறந்த கழகமாகக் கல்முனை நகர லயன்ஸ் கழகம் திகழ்கின்றது. இக்கழகத்தின் தொடர் சேவைகள் பெரிதும் பாராட்டத்தக்கவையாகும்.

இவ்வாறு, லயன்ஸ் 306 சீ 2 மாவட்ட ஆளுநர் லயன் டாக்டர். ரசிக்க எஸ். பிரியந்த கூறினார்.

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வதேச மற்றும் லயன்ஸ் கழகங்களின் நிதிப் பங்களிப்பில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களக்கு உதவும் திட்டத்தின் கீழ் இந்த உலர் உணவுப் பொதிகள் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், இருமாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட 1300 குடும்பங்களுக்கு தலா 1500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை நகர லயன் கழகத் தலைவர் லயன். எந்திரி. பி. ராசமோகன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் 306 சீ 2 மாவட்ட ஆளுநர் லயன். டாக்டர். ரசிக்க எஸ். பிரியந்த தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் எமது லயன்ஸ் கழக திட்டம் கிழக்கில் பரவலாகவுள்ள எமது கழகங்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கான பயனாளிகள் மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களின் சிபார்சுடன் தெரிவு செய்யப்பட்டு உலர் உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் இன்றைய கொவிட் பரவல் இக்கட்டுகளுக்கு மத்தியிலும் சுகாதார வழிமுறைக்கமைய நிகழ்வை ஏற்பாடு செய்த கல்முனை நகர லயன்ஸ் கழகத்தைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

லயன்ஸ் 306 சீ 2 மாவட்டத்தில் கல்முனை நகர லயன்ஸ் கழகம் மிக நீண்டகாலமாக சிறப்புற இயங்கும் கழகமாகும்.

இக்கழகத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சேவை மனப்பாங்குடன் செயற்பட்டு வதுடன் லயன்ஸ் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்து வருகின்றனர் என்றார். அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன் உரையாற்றுகையில், மக்கள் சேவையையே முதன்மை நோக்காகக் கொண்ட லயன்ஸ் கழகங்களின் பணிகள் பெரிதும் பாராட்டத்தக்கவையாகும்.

இந்த அடிப்படையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கும் லயன்ஸ் கழக திட்டத்தில் எமது மாவட்டத்தையும் இணைத்துக்கொண்டமைக்காக நாம் நன்றி பகிரக்கடமைப்பட்டுள்ளோம்.

குறிப்பாக லயன்ஸ் 306 சீ 2 மாவட்ட ஆளுநர் மற்றும் லயன்ஸ் கழகங்களுக்கும் மாவட்ட மக்களின் பெருநன்றியைத் தெரிவிக்கின்றோம்.

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தைப் பொறுத்தவரை எமது பிரதேச பின் தங்கிய, வறிய மக்களுக்கு ஆற்றிவரும் தொடர்ச்சியான சேவைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இயற்கை அனர்த்தங்கள் இடர்களால் பாதிக்கப்படும் வறிய மக்களுக்கு முதன்மை நிலையில் உதவிக்கரம் நீட்டும் கழகமாக இக்கழகம் திகழ்கின்றது.

தன்னலமற்ற சேவைமனப்பாங்கும் செயற்பாடும் கொண்ட இக்கழக உறுப்பினர்கள் பெரிதும் பாராட்டத்தக்கவர்கள் என்றார்.

லயன்ஸ் கழக வலயத் தலைவரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளருமான லயன். கே. தட்சணாமூர்த்தி, கல்முனை நகர லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் எம்.சுதர்ஸன், பொருளாளர் லயன். எம். பரமேஸ்வரநாதன் (எம்.ஏ.எப்) பிராந்தியத் தலைவர் லயன் டினுசன், உட்பட மாவட்ட ஆளுநரின் கெபினற் உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




# கட்டாக்காலி மாடுகளால் மாணவர்கள் தினமும் அசௌகரியம்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட கட்டைபறிச்சான் சம்பூர் வீதிகளில் கட்டாக்காலி மாடுகளால் பாடசாலை மாணவர்களும், பொது மக்களும் தினமும் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.












# விடுதலை அரசியலில் பிரிவினையை ஏற்படுத்தி ஒற்றுமையினை சிதைக்கக்கூடியவர்களுக்கு முகம் கொடுத்தேயாக வேண்டும்

## மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்



(சஞ்சயன் )

தனிநபர் பிரிவினைக்கும் கொள்கைப் பிரிவினைக்கும் நிறையவே வித்தியாசங்கள் இருக்கிறது. தனிநபர் பிரிவினை சர்வ சாதாரணம். ஒருவர் மற்றவருக்கு பிடிக்காமல் இருப்பினும் பொதுவான கொள்கையில் அந்த இருவரும் இணங்கி செயல்பட்டால் எந்த பிரிவினையும் வராது. சுமார் 72, வருடகால தமிழ்த்தேசிய அரசியல் வரலாற்று பாரம்பரியம் கொண்ட விடுதலை அரசியலில் மேடு பள்ளம் கடந்து செல்லும்போது பிரிவினையை ஏற்படுத்தி ஒற்றுமையினை சிதைக்கக்கூடியவர்களுக்கு முகம் கொடுத்தே ஆகவேண்டும் என, மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகச் செயலாளரும், தமிழரசு கட்சி பட்டிருப்புத் தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய அரசியல் வீழ்ச்சிக்கு பேரினவாத பெரும்பான்மையே முழுமையான காரணம் என அழுத்தமாகக் கூறுவேன். கடந்த நல்லாட்சி என்ற நரியாட்சி கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஏற்று படிப்படியாக ஏமாற்றியது. பிரதமராக இருந்த ரணிலின் பதவியை தக்க வைப்பதற்காக கூட்டமைப்பினால் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்பது போன்ற தோற்றப்பாட்டை காட்டியது. இதில் புதிய அரசியலமைப்பு முன்மொழிவுகளை பல கூட்டங்களில் ஏற்றுக்கொண்டு அது நிறைவேறும் நிலை உருவானபோது அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசனா நாடாளுமன்றத்தை சட்டத்திற்கு முரணாக கலைத்து புதிய அரசியல் யாப்பை இல்லாமல் செய்தார். அது போலவே கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தும் விதமாக கூட்டமைப்புக்கு வாக்குறுதிகளை வழங்கிய ரணில் விக்கிரமசிங்க அதை நிறைவேற்றாமல் தமிழ்மக்களையும் எம்மையும் ஏமாற்றினார். இந்தத் தாகமெல்லாம் எம்மை பாதித்தது. நம்பி ஏமாற்றப்பட்டோம் என்பது உண்மை, அதன் பலன்தான் இன்று எம்மை நம்பி ஏமாற்றிய ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து ஒருவர் கூட கடந்த தேர்தலில் தெரிவாகவில்லை. பிரதமர் ரணில் கூண்டோடு தோல்வி கண்டார்.

கடந்த காலங்களில் தவறான பாதையில் சோரம் போனதால் தம்மை மக்கள் நிராகரித்தார்கள் என்ற உண்மையை உணர்ந்த சிலர் மனம் மாறி தமிழ்த்தேசியக் கொள்கையை ஏற்று வருபவர்களை ஏற்றுக் கொள்வதில் எந்த தவறும் இல்லை. வருந்தி எவரையும் அழைக்கவில்லை திருந்தி வருபவர்களை ஏற்றுக்கொள்வோம்.அப்படியானவர்கள் தொடர்ந்தும் தமிழ்த்தேசியக் கொள்கையுடன் பயணிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்றார்.

# அறநெறி மாணவர்களுக்கான சத்துணவு திட்டம்





(பொன்ஆனந்தம் )

அறநெறி மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டம்தம்பலகமம் பத்தினி புரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய உறவுகள் நலன்புரிச் சங்கத்தினால் பாலம்போட்டாறு பத்தினி புரம் பத்தினி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவு வழங்கல் திட்டமே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மிகவும் பின்தங்கிய பிரதேசமான இப்பகுதியில் உள்ள மாணவர்களின் போசாக்கு நலன்கருதி இத்திட்டம் நடடைமுறைப்படுத்தப்படுகின்றது.

# திருகோணமலை பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மையவாடி சிரமதானம்






(எப்.முபாரக் )

திருகோணமலை பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் திருகோணமலை என்.சி.வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் மையவாடி அண்மையில் சுத்தப்படுத்தப்பட்டன,இதில் நான்கு மதங்களையும் சேர்ந்த பிரஜைகள் குழுவினர்,திருகோணமலை நகர சபை உறுப்பினர்கள் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டு சிரமதானம் மேற்கொள்வதை காணலாம்.

# மட்டு. கல்முனை பிரதான வீதியில் விபத்து; இருவர் படுகாயம்



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் இன்று காலை இடம்பெறற பாரிய விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்முனை திசையிலிருந்து நேற்றுகாலை 7.45 மணியளவில் மட்டக்களப்பு நோக்கி வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்று மட்டக்களப்பு நாவற்குடா தொழிலநுட்பக்கல்லூரிக்கு முன்னால் யூ வளைவில் திரும்பிய போதே குறித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்துஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்த இருவரும் 1990 அம்புலன்ஸ் மூலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதுடன் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுவருகின்றது.

காத்தான்குடி மோட்டார் போக்குவரத்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வழங்குதல் நேர்முகப் பரீட்சை





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

இளம் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்க காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு இலட்சம் காணித் துண்டுகளை வழங்குதல் என்ற திட்டத்திற்கு அமைவாக நேர் முகப்பரீட்சை தற்போது இடம் பெற்று வருகின்றது.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவிலும் நேற்றுடன் மூன்றாவது நாளாக காணித துண்டுகளை வழங்குதல் தொடர்பான நேர்முகத்தேர்வு பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்று வருகின்றது. இதன் போது பல ஆவணங்கள் பரிசீலிக்கப் படுகின்றன.

குறித்த நேர்முகத்தேர்வானது காணிக்கிளை ஊடாக இடம் பெறுவதுடன் நேர்முகத்தேர்வில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவித் சிட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட இதில் பங்கேற்று பரிசீலித்து வருகிறார்கள்.

# மட்டக்களப்பில் 'இலங்கையின் அரச அலுவலக நிர்வாகமும் சமகால நடைமுறைகளும்' நூல் வெளியீடு

(சஞ்சயன்)

கலாநிதி எஸ். அமலநாதன் எழுதிய 'இலங்கையின் அரச அலுவலக நிருவாகமும் சமகால நடைமுறைகளும்' நூல் வெளியீடு, மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக டோபா கேட்போர்கூடத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(21) பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இறைவரித் திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் சட்டத்தரணி மு. கணேசராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை பராமரிப்பு மற்றும் சிறு வர்த்தக பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் மட்டு பாராளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன் மற்றும் மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான கோ.கருணாகரம் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர்.

பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை பராமரிப்பு மற்றும் சிறு வர்த்தக பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் அ.சேனநாயக்க, மட்டு. மாவட்டச் செயலாளர் க.கருணாகரன், பதில் நீநிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான க.பேரின்பராசா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் மற்றும் யாழ். பல்கலைக்கழக கலைத்துறை ஓய்வு நிலை பீடாதிபதி பேராசிரியர் வே.பி.சிவநாநன், திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் வ. கனகசிங்கம், தென்கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடாதிபதி கலாநிதி செ.குணபாலன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறை பேராசிரியர் வே.குணரெத்தினம் நூலாய்வினை ஆற்றவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெருந்தோட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் – ஜே.வி.பி



(க.கிஷாந்தன்)

பெருந்தோட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான அனைத்துவிட நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் - என்று ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மஸ்கெலியா பிரவுண்ஸ்வீக் தோட்டத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என சம்பள நிர்ணய சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தாலும் அது தொடர்பான பிரச்சினை இன்னும் தீரவில்லை. ஆயிரம் ரூபா என்ற கோரிக்கை 6 வருடங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட கோரிக்கையாகும். அதனை வலியுறுத்தி தொழிலாளர்களுடன் இணைந்து நாமும் போராடினோம். 6 வருடங்களுக்கு முன்னர் இருந்த பொருளாதார நிலைக்கேற்பவே அந்த தொகை நிர்ணயிக்கப்பட்டது. தற்போது பொருட்கள், சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. எனவே, கிடைக்கவுள்ள ஆயிரம் ரூபா போதாது என்பதையும் கூறியாக வேண்டும்.

சம்பள நிர்ணய சபையில் எமது அங்கத்தவர்கள் இருவர் அங்கம் வகிக்கின்றனர். சம்பள உயர்வுக்காக அவர்களும் குரல் கொடுத்தனர். சம்பள நிர்ணயசபை ஊடாக சம்பளம் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், கூட்டு ஒப்பந்தம் ஊடாக கிடைக்கப்பெறும் சலுகைகள் கிடைக்கப்பெறுமா என்ற கேள்வியும் எழுகின்றது. அவ்வாறு இல்லாது செய்யப்பட்டால் அவற்றை பெறுவதற்காக நாம் போராடுவோம். தொழிலாளர்களின் உரிமைக்காக நடைபெறும் அனைத்து போராட்டங்களுக்கும் நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம்.

மலையக மண்ணை பெருந்தோட்டத் தொழிலாளர்களே வளமாக்கினர். அவர்கள் சிந்திய வியர்வை மண்ணில் கலந்துள்ளது. அந்நிய செலவணியை பெற்றுக்கொடுக்கின்றனர். ஆனாலும் பெருந்தோட்ட மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். வாழ்வாதாரம் உரிய வகையில் மேம்படவில்லை. மனிதர்களாக வாழ்வதற்கான தேவைகளை இந்த நாட்டை ஆண்ட அரசுகள் செய்துகொடுக்கவில்லை. உழைப்புக்கேற்ப ஊதியம் கூட இல்லை. பலர் இன்னும் லயன் அறைகளில்தான் வாழ்கின்றனர். அனைத்து வளங்களையும்கொண்ட பாடசாலைகள் இல்லை. இப்படி பல பிரச்சினைகளை பட்டியலிடலாம். உரிமைகள் மற்றும் சகல அந்தஸ்ததுகளுடனும் பெருந்தோட்ட மக்களும் வாழ வேண்டும். இந்நிலைமையை பெற்றுக்கொடுப்பதற்கு மலையக தலைவர்கள் என கூறிக்கொள்பவர்கள் நடவடிக்கை எடுத்ததில்லை என்றார்.

# காத்தான்குடியில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு ஆடுகள்





(ரீ.எல்.ஜவ்பர்கான்)

காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் சுய தொழிலில் ஈடுபடும் 10 பேருக்கு வெவ்வாய்க்கிழமைஆடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் காத்தான்குடி செயற்பாட்டாளர் எம்.எஸ்.எம்.சிபானின் வேண்டுகோளவின்பேரில் பின்தங்கிய கிராமங்கள் அபிவிருத்தி, உள்நாட்டு கால்நடை பராமரிப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் சிபாரிசினால் இந்த ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

காத்தான்குடியிலுள்ள 10 பயணாளிகளுக்கு ஒரு பயணாளிக்கு 2 ஆடுகள் வீதம் வழங்கப்பட்டன.

இந்த ஆடுகளை வழங்கும் வைபவத்தில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயஸ்ரீதர், ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் காத்தான்குடி செயற்பாட்டாளர் எம்.எஸ்.எம்.சிபான் உட்பட. பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர். இது இரண்டாம் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டது.

# 60 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு









(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்கள் 60 பேருக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நீலன் அறக்கட்டளை அமைப்பினால் குறித்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் கூழாமுறிப்பு பங்குத்தந்தை பத்திநாதன் அடிகளார் கரைதுறைப்பற்று பிரதேச சபை உப தவிசாளர் இ.இரவீந்திரன் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் க.விஜிந்தன் வித்தியானந்தா கல்லூரி தேசிய பாடசாலை முன்னாள் அதிபர் க.சிவலிங்கம் உள்ளிட்ட அதிதிகள் பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.





'அக்னிச் சிறகுகள்' பேரவையின் கல்விக்காக கரம் குவிப்போம் என்ற சிந்தனையின் ஊற்றாக நாவற்காடு நாமகள் கனிஷ்ட வித்தியாலயத்தில் புலமைப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு செயலட்டைகள் வழங்கி வைப்பதை இங்கு காணலாம்.

# ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரமற்ற மக்கள் உடன் பிரதேச செயலகத்தை தொடர்பு கொள்ளவும்

(வி.சுகிர்தகுமார் )



ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பிறப்பு அத்தாட்சிப்பத்திரமற்ற மக்கள் உடன் பிரதேச செயலகத்தை தொடர்பு கொள்ளுமாறு மேலதிக மாவட்ட பதிவாளர் எம்.பிரதீப் கேட்டுக்கொண்டார்.

பிறப்புப் பதிவு அத்தாட்சிப்பத்திரம் இல்லாத சகல இலங்கைப் பிரஜைகளுக்கும் அவற்றைப் பெற்றுக்கொடுக்கும் ஜனாதிபதியின் சிந்தனைக்கமைவாக தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரது அறிவுத்தலின் பிரகாரம் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் இது வரையில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாத அல்லது இதுவரையில் தமது பிறப்பைப் பதிவு செய்திராத பிரஜைகள் சகலரும் தங்களது கிராம சேவகர் பிரிவுகளுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்களை உடனடியாக அணுகி விபரங்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இயலுமானவர்கள் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவுக்கு வருகைதந்து குறித்த விபரங்களை நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம் எனவும் அவர் கூறினார்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின், 067 2277436 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் பிறந்த மண்ணின் வாரிசுகளான நீங்கள் பாக்கியசாலிகள்

## குழந்தைகளுக்கு காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் ஜெயசிறில் வாழ்த்து





(காரைதீவு சகா)

உலகின் முதல்தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாந்தா அடிகளார் பிறந்தமண்ணின் வாரிசுகளான நீங்கள் உண்மையில் பாக்கியசாலிகள்.

இவ்வாறு விபுலாநந்தா குழந்தைகளுக்கு வாழ்த்துத்தெரிவித்துரையாற்றிய காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் குறிப்பிட்டார்.

புதிய குழந்தைகளை வரவேற்கும் நிகழ்வு காரைதீவு விபுலாநந்தா மொன்ரிசோரி ஆசிரியைகளான ஜெய நிலாந்தினி ரம்யா தலைமையில் சுகாதாரநெறிப்படி நடைபெற்றது.பிரதமஅதிதியாக தவிசாளரும் கௌரவ அதிதியாக பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜாவும் கலந்து சிறப்பித்தனர்.

தவிசாளர் ஜெயசிறில் மேலும் பேசுகையில்:

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். உண்மை. அதுபோல படிக்கக்கிடைக்கின்ற பாடசாலையும் தலைவிதிப்படிதான் அமைகின்றது. உங்களுக்கு சிறந்த பாடசாலை கிடைத்ததில் மகிழ்ச்சி.

வேகத்துடன்கூடிய விவேகம் கொண்டநீங்கள் நிச்சயம் நல்ல கல்வியைப்பெற்று நற்பிரஜையாக மிளிரவாழ்த்துகிறேன் என்றார்.

# பட்டாளிபுரத்தில் பிறப்புச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(பொன் ஆனந்தம்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாட்டாளிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கு காலடிக்குச் சென்றும் இலவசமாக பிறப்புச் சான்றிதழ் வழங்கி வைப்பதற்கான நடமாடும்சேவை பாட்டாளிபுரம் பல்தேவை கட்டிடத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டிலும் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அனுசரணையிலும் இவ் நடமாடும் சேவை மிகச்சிறப்பாக இடம்பெற்றது.குறித்த நிறுவனத்தினால் இதற்கு முன்னரும் கிராமப்புற மக்களின் நலன்கருதி பல நடமாடும் சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாரக், பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் ஏ.அலாவுதீன், நிருவாக கிராம உத்தியோகத்தர் கே.எம்.ஜறூஸ், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் பொன்.சற்சிவானந்தம்,மாவட்ட பதிவாளர் உள்ளிட்டோரும் பொருளாதார அபிவிருத்தியோகத்தர்கள் ,கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்குச் சூரியன்
18 FEBRUARY 2021, THURSDAY

# அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஐ.ம.ச ஆதரவாளர்களுடன் கலந்துரையாடல்



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் நடவடிக்கை தொடர்பில் ஆதரவாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்று கல்முனை பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் செவ்வாய் இரவு இடம்பெற்றது.

இதன் போது கொரோனா சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்பட்டு குறித்த கலந்துரையாடலானது சட்டத்தரணி எம்.எஸ். அப்துல் றஸாக்கின் தலைமையில் இடம்பெற்றது.

நடைபெற்று முடிந்த தேர்தல்கள் தொடர்பாகவும் அதில் எதிர்கொண்ட சவால்கள் தொடர்பிலும் ஒவ்வொருவரும் தத்தமது கருத்துக்களை கலந்துரையாடலுக்கு வருகை தந்த கட்சி முக்கியஸ்தர்களிடம் தெரிவித்தனர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியை அம்பாறை மாவட்டத்தில் மேம்படுத்தி அதன் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுப்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன்புதிய கட்சியாக மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தி வரும் ஐக்கிய மக்கள் சக்தியை திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் தனித்து போட்டியிட அனுமதிக்க வேண்டும் என பெரும்பாலான மக்கள் பல்வேறு அறிவுறுத்தல்களை தெரிவித்தனர்.

கலந்துரையாடலில் இறுதியாக மக்களின் உணர்வுகளை அறிந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றும் எதிர்காலத்தில் அமைக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைக்கு தீர்வு காண தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கட்சியின் நடைமுறை பிரச்சினைகள் தொடர்பான விடயங்களும் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், முஜிபுர் ரஹ்மான் , இம்ரான் மஹ்ரூப் ,நல்லாட்ச்சிக்கான தேசிய முன்னணியின் தலைவர் பொறியலாளர் அப்துல் ரஹ்மான், ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம்.ஏ.ஹசன் அலி ,உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# "வேர் நதி" பெண்கள் அமைப்பினருக்கு மத்தியஸ்த சபை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு





(றாசிக் நபாயிஸ்)

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் கீழ் இயங்கி வரும் "வேர் நதி" பெண்கள் அமைப்பினருக்கு மத்தியஸ்த சபை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கல்முனை, பாண்டிருப்பு பிரதேசத்தில் காணப்படும்

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் அலுவலக உத்தியோகத்தர் ஆர்.அனுஷ்காவின் நெறிப்படுத்தலில்

பிரதேச இணைப்பாளர்

யூ.எல்.கபீலாவின் தலைமையில் நேற்று நிலையத்தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்வுக்கு வளவாளராக கல்முனை பிரதேச செயலக மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் இம்திஸா ஹஸன் கலந்து கொண்டு தகவல்களை வழங்கினார்.

இதன் போது மத்தியஸ்த சபை ஏன் உருவானது, அதன் நோக்கங்கள் என்ன? அதன் செயற்பாடுகள், எவ்வகையான பிரச்சினைகளை எடுத்து ஆற்றுப்படுத்துகின்றது, மக்களிடையே இருந்து வரும் பிரச்சினைகள் எவ்வாறு மத்தியஸ்தம் செய்யப்படுகிறது, அதனால் ஏற்படும் நன்மைகள் என்ன? என்பன போன்ற பல விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

# சாதாரண தரப் பரீட்சை கடமையாளர்களுக்கான செயலமர்வு





(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வொன்று நேற்று நடைபெற்றது

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் 10ஆம் திகதி வரை நடத்துவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு செய்துள்ளது.

இதற்கமைய கல்முனை கல்வி மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்று கல்முனை சம்மாந்துறை ஆகிய வலயங்களுக்கான பரிட்சை பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் செயலமர்வு அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவிப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எஸ். பிரகாசன் கலந்துகொண்டு விளக்க உரை நிகழ்த்தினார்.

அத்துடன் அக்கரைப்பற்று கல்முனை சம்மாந்துறை பிரவேச பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கினர்.

# மு. காவை இனி சேர்த்துக்கொள்ள மாட்டோமென சஜித் பிரேமதாச இன்னமும் வாய் திறக்கவில்லை!

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் காங்கிரசை நம்ப முடியாது என்றும் இனி வரும் தேர்தல்களில் தனித்தே களமிறங்குவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் சொல்வது இந்த வருடத்தின் வேடிக்கையான கருத்தாகும். இந்த உறுப்பினர்கள் ஏற்கனவே ஐக்கிய தேசிய கட்சியில் இருக்கும் போதும் இப்படித்தான் சொன்னார்கள். பின்னர் தேர்தல் வந்ததும் தமது கட்சியின் அமைப்பாளர்களை கைவிட்டு விட்டு முஸ்லிம் காங்கிரசிடம் மொத்தமாக யானையை ஒப்படைத்ததை கண்டோம் என உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது அறிக்கையில்

அதே போல் 2012ம் ஆண்டு கிழக்கு மாகாண சபை தேர்தலின் போது அதற்கு முன் ஐ தே கவுடன் ஒட்டியிருந்த மு. கா அக்கட்சியை கைவிட்டு வெளியேறிய போது உலமா கட்சி மட்டுமே முஸ்லிம் கட்சி என்ற வகையில் ஐ தே கவுக்கு கை கொடுத்தது. அப்படியிருந்தும் அக்கட்சி நன்றி மறந்து மீண்டும் மு. காவிடம் சரணடைந்தது. அத்தேர்தலில் உலமா கட்சி ஐ தே கவுக்கு ஒத்துழைக்க ஏற்பாடு செய்த முஜிபுர்ரஹ்மான் அவர்கள் பின்னர் நான் என்ன செய்வது, தலைவர் நாம் சொல்வதை கேட்கிறாரில்லை என கை விரித்தார்.



சிறிய கட்சிகளை பேரின கட்சிகள் அழைத்து அவை மூலம் பிரயோசனம் அடைந்து விட்டு பின்னர் அவற்றை கை விடுவதும், கொஞ்சம் பெரிய கட்சிகளுடன் இணைந்து தம் சொந்தக்கட்சி அமைப்பாளர்களை கை விடுவதும் இலங்கை அரசியலில் இன்னமும் மாறாத ஒன்றாக உள்ளது. அதே போல் ஐ தே கவின் முஸ்லிம் பிரதேச அமைப்பாளர்கள் பலர் கை விடப்பட்ட பரிதாப நிலையையும் கண்டோம். அவர்கள் தமது ஆதரவாளர்களுக்கு சேவை செய்ய முடியாமல் ஹக்கீமின் வாசலில் போய் நிற்கும் நிலையை ஐ.தே.க ஏற்படுத்தியிருந்தது.

இப்போது அதே பாட்டை மீண்டும் ஐ தே கவிலிருந்து பிரிந்துள்ள ஐ ம. சக்தி எம் பீக்கள் சொல்கின்றனர். ஆனாலும் மு. காவை இனி சேர்த்துக்கொள்ள மாட்டோம் என கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச இன்னமும் வாய் திறக்கவில்லை. கட்சித்தலைவர் இவ்வாறு பகிரங்கமாக சொல்லாதவரை கட்சியின் முஸ்லிம் உறுப்பினர்கள் சொல்வது குப்பைத்தொட்டிக்குள்தான் போகும்.

அதன் பின் அக்கட்சியின் முஸ்லிம் பிரதேச அமைப்பாளர்கள் மீண்டும் கைசேதப்பட்டவர்களாக முஸ்லிம் காங்கிரசின் கீழ் அடிமைகளாக வேலைக்காரர்களாக இருந்து கொண்டு ஒப்பாரி வைக்கும் நிலை ஏற்படும். ஆகவே இது பற்றி சஜித் பிரேமதாச பகிரங்கமாக அறிக்கை விடுவாரா என உலமா கட்சி சவால் விடுக்கிறது என தெரிவித்துள்ளார்.

# நாவிதன்வெளிஅன்னமலை மகாவித்தியாலயத்தில் வித்தியாரம்பம்!

(சகா)

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் 1ஆம்ஆண்டு மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்பவிழா நேற்று அதிபர் சீ.பாலசிங்கன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதமஅதிதியாக பாடசாலை மேம்பாட்டுநிகழ்ச்சித்திட்ட இணைப்பாளரும் உதவிக்கல்விப்பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கலந்துகொண்டு தேசியக்கொடி ஏற்றிவைத்து சிறப்புரையாற்றி சிறப்பித்தார். கௌரவஅதிதியாக இலங்கைவங்கியின் நாவிதன்வெளிக்கிளை முகாமையாளர் கே.சசிதரன் கலந்துசிறப்பித்தார்.

முன்னதாக புதியமாணவர்கள் பழையமாணவர்களால் மாலைசூட்டப்பட்டு மாஸ்க் அணிவிக்கப்பட்டு பேஸ்ஷீல்ட் அணிவிக்கப்பட்டு உண்டியல் வழங்கப்பட்டு வர்ணகுடையும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.



விவசாய இராஜாங்க அமைச்சின் திட்டத்திற்கமைய 1ஆம் வருட மாணவர்க்கு மரக்கன்று விநியோகம் செய்யப்பட்டது.

பின்னர் பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் சுகாதார நடைமுறைப்படி வரவேற்பு நிகழ்வும் நடைபெற்றது.

அவ்வமயம் தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 07மாணவர்கள் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.